செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ஞு மாசி மீ உக வெள்ளிக்கிழமை (13-2-1970) [இல-௲ச

கச்சியப்பசிவாசாரியர் குருபூசை

நாவலர் ஆச்சிரமத்தில் நிகழ்ச்சிகள்

திருவருளை முன்னிட்டு வழமை போல மாசி மூ- 4-ம் திகதி (15-2-70) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் கச்சியப்பசிவாசாரியார் குருபூசை, சபை நாவலர் மண்டபத்தில், சைவப்புலவர்மணி திரு த குமாரசுவாமிப் புலவர் தலைமையில் இரவு 6-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தேவாரமணி, தேவார இன்னிசைச் செல்வர் திரு. P A S. இராஜசேகரன் தமிழ் மறை ஓதுவார். பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம், சைவப்புலவர் திரு. ச மகரலிங்கம், பிரம்மஸ்ரீ வ. குகசர்மா முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். விழா ஆரம்பத்தில் நடராஜர் பூசையும் கந்தபுராணத் திருமுறைப் பூசையும் நடைபெறும

X X X

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கோவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசசுவாமிகள்.

நாவலர் பெருமான் கந்தபுராண சபை

கந்தபுராண வார நிகழ்ச்சிகள்

12, 13-2-70 நல்லூரிலும் வண்ணைச் சிவன் கோவிலிலும் வழிபாடு, கந்தபுராண நூல் விற்பனைவைச் சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் அவர்கள் தலைமைதாங்கி ஆரம்பித்து வைத்தல்

14-2-70 (காலை 8-15 மணிக்கு இலங்கை வானொலியில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் பேச்சு; வண்ணை நாவலர் மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நாற்காட்சியைச் சைவபரிபாலனசபைக் காரியதரிசி திரு ஆ. தனபாலசிங்கம் அவர்கள் தலைமைதாங்கி ஆரம்பித்துவைத்தல்.

15-ம் திகதி முக்கிய முருக தலங்களில் சபையின் சார்பிற் பூசை; நாவலர் மண்டபத்தில் சைவபரிபாலன சபையின் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் குருபூசை நிகழ்ச்சிகள்; பத்திரிகைக் காட்சி

பி.ப. 5 மணிக்குக் கந்தபுராண படனப் பயிற்சி நிலையத்தை சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப் புலவரவர்கள் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தல்.

17-ம் திகதி நாவலர் மண்டபத்தில் பி. ப. 5 மணிக்கு முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் தலைமையில் கந்தபுராண நூற்பதிப்பு ஆய்வு அரங்கம். திரு. க. சிவராமலிங்கம் திரு.

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

சிங்கப்பூர் ஸ்ரீ செண்பகவிநாயகர்கோயில்

ஷெ கோயில் பரிபாலனசபையினர் சபைத் தலைவருடைய உதவியுடன் தென்னாட்டிலும் இலங்கையிலுமுள்ள கோயில் இராஜ கோபுரங்களைப் பார்வையிட்டபின் தங்கள் கோயிலுக்குச் சிற்பவேலைகள் அமைந்த ஓர் இராஜ கோபுரத்தைச் அமைப்பித்துள்ளார்கள். இந்திய சிற்பிகளே வேலையைப் பூர்த்திசெய்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவாலியூர் சிவஸ்ரீ சா. விசுவநாதக்குருக்கள் ஸ்ரீமத் ரீ செல்லத்துரை ஐயர் ஸ்ரீமத் ஆறுமுக ஐயர் முதலியவர்கள் ஷெ கோயில் கும்பாபிஷேக வைபவத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள.

இலட்சுமி தீபம் சிவஸ்ரீ விசுவநாதக்குருக்களின் பாரியாரால் ஏற்றி வைக்கப்பெற்றது.

கந்தபுராண வாரம்

(12-2-70 — 18-2-70)

கதிர்காமத்தில் அர்ச்சனை

12-2-70 தொடக்கம் 18-2-70 வரை நடைபெறும் கந்தபுராண வாரத்தை முன்னிட்டுக் கச்சியப்பர் திருநாளாகிய 15-2-70 அன்று கந்தபுராண சபைச் சார்பில் பிரபல முருகன் கோயில்களில் அர்ச்சனை வழிபாடு நடைபெற இருக்கின்றது. தெற்கே கதிர்காமத்திலும் கிழக்கே மண்டூர்க் கந்தசுவாமி கோயிலிலும் வடக்கே செல்வச்சந்நிதியிலும் மேற்கே கொழும்பு ஜிந்துப்பிட்டிச் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலிலும், மத்தியஇலங்கையில் பேராதனைச் சர்வகலாசாலை முருகன் கோயிலிலும் நல்லைக் கந்தன் கோயிலிலும் அர்ச்சனை வழிபாடு ஆதின நடைபெறவிருக்கின்றன.

கச்சியப்பசிவாசாரியார்

— பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் —

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுயர்ந்து நிமிர்ந்த பெரியார்கள் வரிசையில் வைத்தெண்ணப்படக்கூடிய தனிச் சிறப்புப் பெற்றவர் கச்சியப்ப சிவாசாரியார். இப்பெரியார் உலகம் உய்விக்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட ஓர் அவதார புருடர். நாயன்மார்கள் எவ்வாறு இறைவனின் அருளைப் பெற்று உயர்வடைந்து சைவ சமயத்தைக் காக்கப் பாடுபட்டார்களோ அவர்களைப்போன்றுவாழ்ந்தவரே கச்சியப்ப சிவாசாரியார் சைவசமயத்தின் பெருமையை நிலைநாட்டி அதனைப் பாதுகாப்பதற்கு வழிவகுத்தார். இறைவனின் பெருமையினைத் தவிரப் பிறவற்றைத் தன் நாவினால் உச்சரித்தால் பாவம் எனக்கருதினார் கலியுகக் கடவுளான முருகப் பெருமான் மீது அளவற்ற பக்தி செலுத்தினார். சூரபதுமனை அழித்துத் தேவர் குறை களைந்த உத்தமனே தன் குலதெய்வமென நினைத்தார். பிரணவப் பொருளைத் தந்தைக்கெடுத்தியம்பிய பெருமானை 'முருகா! முருகா! என்று பலதடவை பண்படச் செப்பி அவன்றி அணுவும் அசையாது என்ற தலையாய முடிவான வழியைக் கடைப்பிடித்தவர். இத்தகையோரின் வரலாற்றை எம் மனதிலே நாங்கள் ஒரு கண நேரம்மட்டும் நினைத்தாலே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

வாழ்க சைவ சாதனங்கள்

[தொண்டை மண்டலம் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இப்பத்திரிகாசிரியரிடம் கொழும்பு மாநகரில் அளித்த ஆசிச் செய்தி]

கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் தமிழிலும் சைவத்திலும் மிக்க பற்றுடையவர்கள். சிவஞானபோதம் பிரசங்கத்தைக் கேட்க விவேகானந்த சபைக்கு நல்லோர் பல்லோர் தினமும் வந்து அமைதியுடன் இருந்து சாத்திரப் பொருளை நன்கு அறிகின்றனர். இவ்வாறு தமிழகத்தில் இப்போது இல்லை. யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இந்நிலையை நாங்கள் அறிந்து பெரிதும் வியக்கின்றோம். இவ்விருவிடத்திலும் உள்ள தமிழ்மக்கள் திரிகரணசுத்தியுடன் சைவ சமயத்தையும் அதனை உணர்த்தும மொழியையும் போற்றி வரக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு நாளிலும் ஒருமணி நேரமாகுதல் திருமுறைகளையும மெய்கண்ட நூற் பொருள்களையும கற்றுணர்தலைப் பழக்கமாக கொண்டிருத்தல் வேண்டும். திருநீறு திருவடையாள மாலை (உருத்திராக்கம்) திருவைந்தெழுத்து நினைவு இம் மூன்றும் சைவர்க்கு இன்றியமையாத சாதனமாகி திருவடியை அடைவிக்கும். ஆனால் இச் சைவ சாதனத்தைக் கடைப்பிடித்துத் திருவருட் பேற்றிற்கு இவை துணையென்பதனையும் அநுபவத்தால் உணர்ந்து மறவாது போற்றி வரவேண்டும். எச் சமயத்துக்கும இல்லாத சிறப்பு நம் சைவ சமயத்துக்கே உரியதாயிருக்கின்றது. அது பிற உயிர்கள்பால் இரக்கம் கொண்டிருப்பதாகும். அதுவே சிவபெருமானிடத்துள்ள கருணையென்னும சக்தியின் அடையாளமாகும். ஆதலின் திருவள்ளுவர் கூறிய 'தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனுண்பான் எங்ஙனமாளு மருள்'' என்னும் திருக்குறட் பொருளை மறவாது பழக்கத்திற் போற்றிவரல் வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் — கொழும்பிலுமுள்ள சைவ மக்கள் சைவமடாதிபதிகளிடத்துக் கொண்டுள்ள மிக்க பக்தியும் விசுவாசமும் என்றும் நின்று நிலவுக. அவை எங்களால் பெரிதும் பாராட்டப்படும்.

'இந்துசாதனம்' சைவக் காவலன், ஈழநாடு, தினகரன், வீரகேசரி என்னும் இதழ்களெல்லாம் எங்களை நாடுமுழுதும் அறியச்செய்தமையை என்றும் மறவோம். அவை என்றும் நிலவுக.

வாழ்க அச்சைவமக்கள், வளர்க அவர்கள் சிவபக்தி, பெருகுக அவர்கட்கு எல்லாச் செல்வ நலன்களும். எல்லாரும் இனிது நீடூழி வாழ்க.

திருவள்ளுவர்தினம்

நல்லை. நாவலர் பெருமான் கருத்துப்படி மாசி உத்தர புண்ணிய தினத்தில் திருவள்ளுவநாயனார் குருபூசையை (23-2-70 திங்கட்கிழமை) வழமை போலச் சிறப்பாகக் கொண்டாட நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் முன் வந்துள்ளது. அன்று நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜஇராசேசுவரி பேச்சியம்பாள் ஆலய மகாமண்டபத்தில் கழகத் தலைவர் திரு க. சோக்கலிங்கம் தலைமையில் திருவள்ளுவர் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

காலம் பெறுமதியானது
துரித சலவைக்கு-
மில்க் வைற்
சலவைப் பவுடர்
பாவியுங்கள்,
பாவித்த வெற்றுறைகளைச்சேகரித்து
பரிசுகளைப்
பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்
இந்துசாதனம்
சௌமிய ஹூ மாசி மீ உ-வ வெள்ளிக்கிழமை [1-70

கந்தபுராண வாரம்

நமது ஈழ நாட்டில் கந்தபுராண மகிமைக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு நாவலர்பெருமான் கந்தபுராணசபை முயற்சிசெய்கின்றது. 12-2-70 தொடக்கம 18-2-70 வரையும் கந்தபுராண வாரமாகக் கொண்டாடும்வண்ணம் ஷை சபை சைவ மக்களுக்கொரு விண்ணப்பத்தை விடுத்துள்ளது. எங்கள் சைவ பரிபாலன சபையாதரவிலும் சபை நாவலர் சைவாச்சிரம மண்டபத்தில் 15-2-70 கச்சியப்பசிவாசாரியார் குருபூசை வழமைபோல் கொண்டாடப்பெறும்.

உலகுக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும் அவர் அநாதி மலமுத்தரென்றும ஆன்மா அநாதி மல பெத்தனென்றும் ஆன்மாவினுடைய பாசத்தை நீக்கி அதனை சிவமயமாக்குவதே அவருடைய பஞ்சகிருத்தியமென்றும் அசுரர்களை அழித்துத் தேவர்களுடைய சிறையை மீட்டு அநுக்கிரகஞ் செய்தற்பொருட்டு அவர் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகப்பெருமானைத் தோற்றுவித்தாரென்றும் முருகப் பெருமானுக்குஞ் சிவபெருமானுக்கும் பேதமில்லையென்றும், முருகனே சிவனென்றும் சிவனே முருகனென்றும், முருகப்பெருமான் வள்ளியம்மையார் தெய்வயானையம்மையாராகிய இருசத்திகளென்னும் கொடிகள் படரும் முத்திபெருங் கனியை உதவுகின்ற விருட்சமென்றும் கநதபுராணம் விளக்கமாகக் கூறுகின்றது. இவ்விதமான சத்தாகிய சித்தாந்தவுண்மைகள் தெளிவாக விளககப்பட்டிருப்பதை வேதாகம சாரத்தைக் கொண்ட கந்தபுராணம் தெரிவிப்பதை அதனை பத்தியுடன் படிப்பவர்கள் நன்கு உணரலாம்.

நமது நாட்டில் கந்தபுராண படனத்தினால் சைவமும் தமிழும் விருத்தியாயின. நாட்டில் பருவ மழை, நோய் நீக்கம், தானிய விளைவு செல்வம பெருகுவதற்குக் கந்தபுராண படனம உறுதுணையாயிருந்தது இக்காலம நமது நாட்டில் பருவமழையின்மை, வறுமை, மனச்சஞ்சலம், இனப்பகை, தீயவொழுக்கம் முதலிய தீமைகளுக்குக் காரணம் மக்கள் கந்தபுராண படனத்தைக் கைவிட்டமையாகும். அக்குறையை நீக்கச் சைவமக்கள் முன்வருவார்களாக.

"இக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செலவம், புத்திரபாக்கியம, சத்துரு ஜயம், இராச வசியம் முதலிய பயன்களைத் தாம்தாம வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் உரைககப்பட்ட விஷயம். இது சத்தியம், இது சத்தியம் முக்காலும் சத்தியம்". என்று நாவலர்பெருமான் சைவ மக்களுக்கு உறுதியுண்டாக ஆணையிட்டுக் கூறிய திருவாக்கை யாம் மறவாதிருப்போமாக அவருக்கு நாம் தெரிவிக்கக்கூடிய நன்றி முறையான கந்தபுராண படனமே. அங்ஙனம செய்தால் அவருடைய ஆன்மா இன்புறும.

23-2-70 திங்கள் திருவள்ளுவநாயனார் குருபூசை (மாசி உத்தரம்)

வெள்ளி விழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 25-வது ஆண்டு நிறைவு வெள்ளி விழா எதிர் வரும் 17-2-70 மாசி மாதம் 6ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் கொழும்பு மேட்டுத் தெரு விவேகானந்த சபை மண்டபத்தில் தொண்டை மண்டலம் காஞ்சீபுரம் மெய்கண்டாராதீனம் குருமகாசந்நிதானம் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் சிறப்புற நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாத்திகத்தைத் தடுக்கப் பல திட்டங்களை வகுத்தார் நாவலர் பெருமான்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

[வண்ணை. நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர்சங்கம் வித்துவான் ந சுப்பையாபிள்ளை அவர்களுக்கு 15-1-70 அன்று நடாத்திய பாராட்டுவிழாவில் இக் கட்டுரை படிக்கப்பெற்றது]

(முன்வளர்ச்சி —2)

பெற்றோரும் ஏனைய நாவலர் அபிமானிகளும் ஊன்றிச் சிந்திக்க வேண்டிய தொன்றுண்டு.

இப்பொழுது தாய் நாட்டில் நாஸ்திகம் தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகின்றது. ஆட்டத்தின் அதிர்ச்சி இந்த நாட்டையும் தாக்குகின்றது; தாக்கிவிட்டது.

தாக்கங்களிலிருந்து நாடு நெறிப்படுதற்குப் பல்வேறு திட்டங்கள் வகுத்து, அவை செயற்படுதற்குச் சொத்துக்களும் வைத்துச் சென்றிருக்கின்றார் நாவலர் பெருமான்.

நமது தவக்குறைவு காரணமாக, நாவலர் சொத்துக்கள், அவர் திட்டங்களுக்குப் பயன்பட வேண்டிய நேரத்தில் பயன்படாமல் அரசாங்கத்தின் வசப்பட்டு வாளா இடக்கின்றன. உரிய காலத்தில் நாவலர் நோக்கத்தை எடுத்துக் காட்டாமையால், அரசாங்கம் எடுத்துக்கொண்டது அரசாங்கத்திற் குறை கூறுவதற்கு இடம் இல்லை.

பெற்றோரும் அபிமானிகளும் அதிகாரம் படைத்தவர்கள் மூலம், நாவலர் திட்டங்களை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி, நாவலர் சொத்துகளை நாவலர்திட்டத்துக்குப் பயன்படச் செய்யவேண்டும்; செய்ய முடியும் இது சித்திக்குமானால் நாவலர் திட்டம, நமது வித்துவான் அவர்களைப்போல இன்னும் எத்தனையோ வித்துவான்கள் தோன்றுவதற்கு உபகாரமாயிருக்கும். வருஞ் சந்ததிக்கு வாய்ப்பு எற்படும் அன்றி, இக்காலக் கேடுகளைச் சீர்படுத்தற்கும் நாவலர் திட்டத்தில் வழிகள் உண்டு நாவலர் திட்டம வெறுங் கல்வித்திட்டமன்று. அது வாழ்க்கைத் திட்டம; வர்த்தக விவசாய விருத்திக்கும் அவர் திட்டங்கள் வகுத்திருக்கின்றார் பெருமுயற்சியும் எடுத்ததுண்டு.

எந்தத் தொழில் துறைகளில் உள்ளவர்களும நாஸ்திகவழியிற் செல்லாது, தமைப் பேணிக் கொள்ளுதற்குரிய திட்டம் நாவலர் வகுத்த திட்டம்'

நாவலர் சம்பாத்தியம் நாவலர் நோக்கங்களுக்குப் பயன்படுவதே நீதி. அந்த நீதி கிடைக்குமானால், அதனாலே வித்துவான் அவர்களுக்கு உண்டாகும் மனக்குளிர்ச்சி, சாகித்திய மண்டல கௌரவத்தால் உண்டாகும் குளிர்ச்சியிலும் பலகோடி மடங்காயிருக்கு மென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அந்த நீதி நிலவுதற்குரிய நற்சிந்தனையைத் திருவருள் உரியவர்களிடம் உதிக்கச் செய்வதாக.

நாவலர் பெருமானின் நல்லாசி நமக்குக் கிடைப்பதாக.

வித்துவான் அவர்களின் கௌரவம் மேன்மேலும் வளர்வதாக!

கச்சியப்பசிவாசாரியர்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பாவங்கள் குறையும் என்பார் ஆன்றோர்

குலப் பெருமையே தன் குணப் பெருமையென்ற நமபிக்கை மீதூரப் பெற்றவர். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை மூத்தோர் வாக்கைப் பின்பற்றி தந்தை காட்டிய வழியில் வாழ விரும்பினர். இப் பெருந்தகையின் குடும்பமோ ஆதி சைவப் பிராமணக் குடும்பம வேதியர்களுக்குரிய கலாசாரப் பண்பாடுகளெல்லாம் வழுவாமற் கடைப் பிடிக்கப்பட்டு வந்தன 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்ற வள்ளுவர் குறள் நெறி அமைந்திருந்தது. இவர்களின் குடும்பம் மிகவும் அடக்கமானதாகவும் ஒழுக்கமுடையதாகவுமே இருந்து வந்தது. அத்தகைய குடும்பத்தில் அவதரித்த முதலவரே காளத்தியப்பர் இவர் தொண்டை நாட்டுக் காஞ்சிபுரத்தில் ஒரு பெண்ணைத் தன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றமையால் காஞ்சியிலேயே வாழ்ந்து வந்தார் காளத்தியப்பர் இறைவன் மீது கூடிய பற்றுடையவர். வாழ்த்த வாயும், நினைக்கமட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏற்றிப் போற்றி இறைவன தன்னைப்படைத்தது தனக்குத் தொண்டு செய்யவே எனக் கருதி வாழ்ந்தார் பலர் சொல்லொன்று செயலொன்றாக வாழ்வார். ஆனால் இவரோ சொல்லும் செயலும் ஒன்றாகவே மதித்து செயலாற்றி வந்தார். காஞ்சியில் உள்ள சிறப்புப் பெயர் பெற்ற குமரகோட்டத்து முருகனுக்குப்பூசைசெய்து வந்தார் முருகனின் அருளால் எத்தகைய குறையுமின்றி மனையறம் சிறந்த மங்களமாக விளங்கியபோதிலும் மழலையில்லாக் குறைகாட்டி வந்து "மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கள் பேறு" என்ற பொய்யாமொழி வாக்கையும் நினைத்துக் கவலையடைந்து இறைவனைத் தவிர பிறவொருவரும் இக்குறையை நீக்கமுடியாதென கருதி இக்குறையை நீக்குவதற்குப் பலகாலம் முயன்றார். 'வேண்ட முழுவதும் தருவோய் நீ' என்ற மாணிக்கவாசகரின் திருவாக்குக்கேற்ப முருகப் பெருமானிடம் விண்ணப்பித்து நின்றார். தெயவக்கருணை காளத்தியப்பருக்கு கிடைத்தது சில தினங்களில் மனைவி கர்ப்பவதியானாள். பத்துத் திங்கள் பாங்காக ஓடின மண்ணகம் போற்ற விண்ணவர் வாழ்த்தப் பூமியின மீது கச்சியப்பர் அவதரிததார்.

கச்சியப் சுவாமிகள் இயற்றிய புராணம் முப்பொருள் நிலையினை மிகவும் தெளிவாக விளககுகின்றது. இஃது பொருள் நிலைகளால் தமிழ் நூல்கள் யாவற்றிலும் சிறந்தது பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் விளக்கி அவற்றைப் பெறும வழியைக் காட்டுவது. சிவதருமோத்தரங் கூறும் அறங்களை நிலை நிறுத்துவது. பாரதம் முதலியவற்றைப் போலச் சாத்திரங்களைக் கூறுவது. பெரிய புராணத்தை ஒப்பச் சிவபெருமானது திருவருட் சிறப்பையும், அடியார்களது அன்புத்திறனையும் கூறுவது. தோத்திர நூல்களாகிய தேவார திருவாசகங்களைப்போல அரிய அருட்பாக்களைப் பெற்றது. திருக்கோவையார் போலப் பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக நின்று ஆன்ம ஈடேற்ற முறையை ஒருங்கே கூறுவது. சாத்திர நூலாகிய சிவஞானசித்தியாரைப் போல சைவசமய உண்மையை நிலைநாட்டிப் புறச்சமயங்களைக் கண்டிப்பது. ஆயும் தவத்தின் சிறப்பையும சிவ உபசகாயர் பெருமையையும், சிவநிந்தையின் கொடுமையையும் உயிர்கள் முத்திபெறும் முறையினையும விளக்குதலையே மூல நோக்கமாகக் கொண்டது.

வேதமோடு வேதாங்கம்
பயின்ற வல்லோன்
விரிந்த சிவாகமமுணர்ந்து
மேன்மை பூண்டோன்
போதநிறை சிவமறையோன்
காஞ்சி வாழும்
புனிதமிகு கச்சியப்ப
குரவனானோன்
வாதமுறு புலவர் குழா
மகிழ்ந்து போற்ற
மதிமலிமடம்புடைசூழ்
குமரகோட்டத்
தேதமறு சகாத்தமேழு
நூற்றின் மேலா
யிலகு கந்தபுராணமருங்
கேற்றினானே!

இன்று பெரியபுராண விரிவுரை

சிவதொண்டன் நிலையத்தாரின் ஆதரவில் வண்ணை வைத்தீசுவரன் கோயிலில் வெள்ளிதோறும் "சிவதொண்டன்" ஆசிரியரால் மாலை 6 மணி — 7 மணி வரை பெரியபுராண விரிவுரை நடாத்தப்பெற்று வருகிறது. (ந வி)

கோட்டு விற்பனவு விளம்பரம்

D. C. J.

வழ. இல: M B 8096
சோமசுந்தரம் சிறீதரன்பெண் விஷயராணி
பருத்தித்துறை றோட்டு யாழ்ப்பாணம்
—வழக்காளி

எதிராக

1. முருகன் சின்னத்தம்பி
2. பெண் தங்கம்
3 சின்னட்டி இராசையா அல்லது இராசலிங்கம்
வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B 8096-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ஆம் ௵ மாசி மாதம் 26-ம் திகதி வியாழக்கிழமை பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2850-ம் 31-3-66 தொடக்கம் 8-12-66 வரைக்கும் ரூபா 2000/-க்கு 15% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 256-42 இதில் ரூபாய் 1400/- கட்டப்பட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வண்ணார்பண்ணை தென் கிழக்குப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை இறை ஆலடித்தரையும் ஆலடித்தரை அல்லது கிடாவிழுங்கான் பள்ளமும் (Aladitharai Alias Kirdavilunthan-Pallamam) செப்பரப்பு 3 குளி 5 1/2 கிணறும் வான்பயிர் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு யோன் டேவிற்றுக்கும் வைத்திலிங்கம் பெண் தெய்வானைக்கும் உரியவாதனம், வடக்கு நாகமுத்து பெண் செல்லத்திரு தனம் மேற்கு ஒழுங்கை, தெற்கு வைத்திலிங்கம் கந்தையாவிற்கும் பெண் நாகம்மாவுக்குமுரியவாதனம் இதடங்கலும்.

மா. முருகேசு, J.P.
கொம்மிஷனர், விலைமதிப்பாளர்,
"இந்திர பவனம்"
புங்குடுதீவு. 3-1-70.
எம். 408 13-2-70

கோட்டு வுறபனவு விளம்பரம்

வழ. இல: 3358
சாவகச்சேரி சாவகச்சேரி தெற்கு நல்லதம்பி பரமசாமி
—வழக்காளி

எதிராக

மிருசுவில் உசன் கனகசபை கணேசன் —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டில் M. B. 3358-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970- ஆம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 14-ம் திகதி (14-3-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1677-50-ம் இதில் ரூபா 1677-50 க்கு 1-3-67 திகதி தொடக்கம 1-6-67 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 244-47½ சதம். இதில் ரூபா 1230/- இறுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் பச்சிலைப்பள்ளிப் பகுதி தம்பகாமம் கோவிற்பற்று இத் தாலியிறை "மொண்டுவன் வளவும் மொண்டுவன் காடும்" என்கிற 12-ம் றூட் 8-ம் பேர்ச் 6-ம் இது உத்தரவு பெற்ற உலாந்தா [illegible] 24-5-1964 ம் 108-ம் இலக்கப் படத்தில் விந்தாரிக்கப்பட்டு எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2-ம் துண்டு 20 அடி பாதைக்கு ஒதுக்கப்பட்ட நிலமும் கணபதிப்பிள்ளை காசிப்பிள்ளை பெண் நாகமுத்துவுக்கும கந்தையா சுந்தரத்திற்கும் சாள்ஸ். இராசகோன் தம்பையாவின் உருமைக்காறருக்குரிய கோயிற்காடு தோட்டம். வடக்கும் மேற்கும் குறித்த சாள்ஸ் இராசகோன் தம்பையாவின் உருமைக்காறருக்குரிய கோயிற்காடு தோட்டம். தெற்கு தில்லையம்பலம் முருகேசு அல்லது குணரத்தினம் காலம் சென்ற வல்லிபுரம் செல்லையாவின் ஆதனம் இதடங்கலும் இன்னும் கிழக்கெல்லையருகாக 20 அடி அகலமுள்ள பாதை யுரித்துடை. முற்பதிவு B / 62/69.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 23-1-1970
எம். 405 13-2-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

தத்துவ வழக்கு இலக்கம் 2220/T

மரண சாதனம் எழுதாதிருந்து காலஞ்சென்ற சுப்பையா இரத்தினத்தின் சொத்தின் விவகாரத்தில் —இறந்தவர்

தொண்டமானாறு சுப்பையா இரத்தினம் கைம்பெண் பாக்கியரத்தினம் —உரிமைத்தத்துவகாரி

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் 2220/T ம் இலக்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி காலஞ்சென்றவரின் கடன்களுக்காக பின்னால் விபரிக்கப்படும் E. N. 6833 இலக்கமுடைய மோட்டார் வாகனமும் (Motor Car) அதைச் சேர்ந்தவைகளும் 1970 ம் ௵ மார்ச் (பங்குனி) மீ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம், தொண்டமானாறு பருத்தித்துறை - காங்கேசன்துறை றோட்டில் 7-ம் (Mile-Post) கட்டைக்குச் சமீபமாகவுள்ள "யசோதா வைத்தியசாலை" (YASOTHA DISPENSARY) யிருக்கும் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

மோட்டார் காரினதும் அதைச் சேர்ந்தவைகளினதும் விபரம்

இலக்கம் E. N. 6833 செய்கை (Make, போட் அங்கிலியா (Ford Auglia) கறுப்பு நிறம். (2) இரு கதவுகள், வலது முன் பின் டயர் ரியூபுகள் பழுதடைந்தவை, நல்ல நிலைமையிலுள்ள என்ஜின் (Eugine), பழுதடைந்த பற்றறி (Battery), பழுதடைந்த வேகம் காட்டும் கருவி, மேலதிகமான டயரும், ரியூப்பும் சில்லும் இல்லை.

குறிப்பு: பார்க்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

S நல்லையா
லங்கா பிலிங் ஸ்ரேசன்
(Lanka Filling Station)
Thondamanaru
தொண்டமானாறு.

107, பெரியதெரு, ஏ பீ.பீ. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனர்
3-2-70 எம். 404 13-1-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: M. B 8849
1 செல்லத்துரை புஷ்பரத்தினம், குருசுமதவடி, ஆனைக்கோட்டை
எதிராக —வழக்காளி
1. சுந்தரம்பிள்ளை சிவராசா, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8849ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ௵ பங்குனி மீ 9-ம் திகதி (9—3—70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4515ம் 18-2-67 தொடக்கம் 31-8-68 வரைக்கும் ரூபா 3000/-க்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 45ம் 32 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணம்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை 'அடையயடியிப்புலமும் மறுபிரிவுகளும், அடலையடிவளவும் அடலையடிப்புலமும் இதை சுடலையடிப் புலமும்" எனவும் கூறப்படும் நிலப் பரப்பு வரகுச் செய்கை முப்பது (30 Lms. V. C. செய்பயிர் வான் பயிர்களும், மேற்கு எல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் காணிப் பதிவு D 262/264. இதில் தென் மேற்குப் பக்கமாகப் பிரிக்கப் பட்ட நிலப் பரப்பு வரகுச் செய்கை ஏழும் மூன்று குளியும் (7 Lms V C & 3 KLS) உத்தரவு பெற்ற நில அளவைக்காரர் A. லாசரஸ் அவர்களால் 1960 ம் ஆண்டு யூலாய் 8 ம் திகதி (8-7-60) தயாரிக்கப்பட்ட 2745 ம் இலக்க பிளானின் படி எல்லை கிழக்கு இவ் ஈடு வைத்தவருக்குச் சொந்தமான இதில் கூறிய காணியின் மிகுதிப் பாகம், எல்லை வடக்கு பொன்னையா நவரத்தினத்தின் மனைவி மீனாம்பிகையின் ஆதனம். எல்லை மேற்கு பாதையும் எல்லை தெற்கு K. குணரத்தினம். K. சிவராசா, V. நவரத்தினம், K. அம்பிகைபதி ஆகியோரின் ஆதனங்கள். இத்துடன் இதில் கூறிய பாதை பாவிப்புரித்தும்.

"நித்தியகல்யாணி" அ சிவானந்தன்
பலாலி றோட், கொமிஷனர் & விலைமதிப்பாளர்
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
1—2—70 எம். 402 13-2-70

தாயகம் திரும்புகின்றனர்

சென்ற மார்கழி மாதம் திருவாதிரை உற்சவகாலத்தில் திருக்கேதீச்சரத்தில் நிகழ்ந்த திருவாசக விழாவில் தலைமை வகித்து அரிய சைவக் கருத்துக்களை வழங்கியும், யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், திருக்கோணமலையிலும் சித்தாந்த வகுப்புகள் மூலமும், உபந்நியாசங்கள் மூலமும் சைவசித்தாந்த உண்மைகளை சைவ மக்களுக்கு உபதேசித்தும் அரிய சைவத்தொண்டாற்றிய சைவப்பெரியார் தொண்டை மண்டலம் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 28-2-70 அன்று தாயகம் திரும்புகின்றனர். அவர்களுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தாழ்மையுடன் தெரிவிக்கின்றோம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

யாழ்ப்பாணம் 65, சமால் ஒழுங்கை, மொகமெட் அபூபக்கர் கைம்பெண் மொகமெட் மீரா மொகிதீன் நாச்சியா
வழ: இல M B 9764 எதிராக —வழக்காளி
வண்ணார்பண்ணை மேற்கு, 11/2 ஐட்றூஸ் மக்காம் வீதி,
1 சேகு மொகமெட் மொகமெட் யூசுபும் மனைவி
2. மைமூனும் —எதிராளிகள்

M. B. 9764ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1970-ம் ௵ மார்ச் (பங்குனி) மீ 14ம் உ (14-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4710/- மேலும் இத்தொகைக்கு 23-2-68 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் மாதமொன்றுக்கு 30/- ரூபா வீதவட்டியும் கோட்டுச்செலவு 304 ரூபா 30 சதம, பவுண்டேச மற்றும விற்பனவுக்குரிய சலார்களும் இதில் கோட்டுச்செலவு கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை 'இத்தியடி" நிலப்பரப்பு 1. குளிகள் 3¾ அடங்கிய கட்டிடங்களும் செய்பயிர்களும் தென்கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு. மொகமெட் இப்பிராகிம் மனைவி மொகமெட் உம்மாவுக்கும் மீராமொகிதீன் கைம்பெண் ஆயிசா உம்மாவுக்கும பங்காளர்களுக்கும், மீராசாகிப் மனைவி மீராமொகமெட் நாச்சியாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு மீராசாகிப் மனைவி மீராமொகமெட் நாச்சியாவுக்கும் பங்காளர்களுக்கும், மொகமெட் குசெயின்தம்பி சுல்தான் அப்துல் காதருக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும், மேற்கு மீராசாகிப் மனைவி மொகமெட் மீரா நாச்சியாவுக்கும் பங்காளர்களுக்கும, அப்துல்காதர் மனைவி மொகமெட் மீரா மொகதீன் நாச்சியாவுக்கும், மொகிதீன் சாகிப் மனைவி மொகமெட் பாத்தும்மா நாச்சியாவின் உரிமைக்காரர்களுக்கும், மொகமெட் உசன்தம்பி சுல்தான அப்துல் காதருக்குமுரிய ஆதனம், தெற்கு மொகமெட் உசன்தம்பி சுல்தான் அப்துல் காதருக்கும் சேகு பரீத் லெவ்வை மொகமெட் அப்துல் காதருக்கும் பங்காளர்களுக்கும், மொகமெட் இப்பிராகிம் மனைவி மொகமெட் உம்மாவுக்குமுரிய ஆதனம்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
"இராசகிரி" ஏல விற்பனவாளர்.
543, காங்கேசன் துறைவீதி, கொமிஷனரும விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம். 8-1-70 எம் 401, 13-2-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

1. நடராஜா சிவகுருநாதவும் 2. பெண் சுகிர்தாம்பிகை, மல்லாகம்
இல: M. B. 9620 எதிராக —வழக்காளி
குமாரசாமி கந்தையா பெண் சிதம்பரம், அராலி தெற்கு,
—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M. B. 9620-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி. கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1970- ஆம் ௵ பங்குனிமீ 21-ம்திகதி(21-3-70) சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபா 6806/- இன்னும் ரூபா 6000/-த்திற்கு 10-12-1967 தொடக்கம் 4-6-1968 வரைக்கும் பத்து விதவட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு ஐந்து விதவட்டியும் செலவு ரூபா 318-87 (ஏற்பட்ட செலவு 308-05, வெளியாதருச் செலவு 58-12 இனிமேலேற்படுஞ் செலவு 52-10)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி தெற்கிறை கவலந்த இகிரியும மறுபிரிவுகளும அல்லது கேவல்புலம திகிரி" பர. வில. வா. 46 குளி 16 அது உலாந்தா மேஸ்ரர் T சின்னத்துரையால் 2-9-1954 ல் 742 Aம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 3ம் துண்டு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கணபதிப்பிள்ளை விசுவலிங்கத்திற்கும் கிருஷ்ணபிள்ளை பெண் சுவகாமனின் உரிமைக்காரருக்குமுரிய வாதனமும், 4ம், 5ம், 1ம், 2- துண்டுகளும், மேற்கு செல்லப்பா அருணாசலத்திற்கும் மறு பேருக்கும் குமாரதன் நாகமுத்துவிற்கும் மறு தெற்கு குமாரதன் நாகமுத்துவுக்குரிய வாதனம் 4-ம் துண்டிற்குள்ளிருக்கும் கிணற்றில் அரைவாசியும், 'A' என்னும் அட்சரமிட்ட கிணறும், 5ம் துண்டுப் பொதுப்பாதையும் இது முழுவதும் பதிவு இல: E 398/143

தா. க. பொன்னுத்துரை J. P.
'அகிலகம்" கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி யாழ்ப்பாணம். எம், 403 13—1—70
30—1—70

அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

தும்பளை, பருத்தித்துறை வடலிப்பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி நா. சிவப்பிரகாசம், ஸ்ரீமதி வே. சிநாசித்தம்பி அவர்களிடம் 1967 ஆம் வருடம் தை மாதம் 1-ம் திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் தவணை தப்பி மீட்கப்படாதவை 1970ம் ௵ பங்குனி மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் ஷை அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

'சந்நிதி வேல்" கா. முத்துக்குமாருஐயர்
பருத்தித்துறை, கொமிசனரும விலைமதிப்பாளரும்
Auctioneer
எம் 397. 6, 13-2-70

15-2-70-இல்

கச்சியப்ப சிவாசாரியர் குருபூசை

நாவலர் பெருமான் கந்தபுராண சபை

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

தேவன் ஆகியோர் பங்குபற்றுவர்.

18-ம் திகதி பி. ப 5 மணிக்கு நாவலர் மண்டபத்தில் கவிஞர். கந்தவனம் தலைமையிற் கந்தபுராணக் கவிதாஞ்சலி; வாழ்த்துச் செய்திகள்.

நாடோறும் மாலை 6 மணிக்கு நாவலர் மண்டபத்திற் கந்தபுராணபாராயணமும், கந்தபுராணச் சொற்பொழிவுந் தொடங்கும், தலைவர் திரு. வை. இரகுநாத முதலியார் தலைமையில் நடைபெறும்.

கந்தபுராண நூல் விற்பனை

சமீபத்தில் வெளிவந்த காசிவாசி செந்திநாதையரின் கந்தபுராண நவநீதம், பண்டிதமணியின் கந்தபுராண போதனை கந்தபுராண கலாசாரம், வித்துவான் சுப்பையா பிள்ளையின் கந்தபுராண முதற் பதிதி உரை விளக்கம் முதலியவை குறிப்பிடத்தக்க நூல்களாம்.

பல்கலைக் கழக
விசாரணைச் சபை

பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட மலலசேகரப் பல்கலைக் கழக விசாரணைச் சபை 13-2-70 சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றது. விசாரணை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் பல சபைகளும் தனிப்பட்ட பிரமுகர்களும் சாட்சியமளிப்பார்கள். யாழ்ப்பாணம் சைவபரிபாலசபை தனது அபிப்பிராயங்களை 14-2-70 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10-30 - மு. ப. 11 க்கும் இடையில் ஷெ விசாரணைச் சபைக்கு தெரிவிக்கும். ——

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. முருகேசு சண்முகமும் பெண்
2. பரமேஸ்வரியும் இருவரும்

வளந்தலை, காரைநகர் வடக்கு
காரைநகர்
—வழக்காளி

எதிராக

தம்பையா பத்மநாதன், பட்டினசபை வீதி, எருவூர் செங்கலடி, என்பவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பையாவும் பெண் பொன்னம்மா (இருவரும் பிறவுண் வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.) வின் சட்டப்படி பிரதிநிதியாகவும், தனக்காகவும்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 4900-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு பங்குனி ௴ 2 - ஆம் திகதி (2-3-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3173/-ம், 25—6—1962 தொடக்கம் 11—11—1962 வரைக்கும் ரூபாய் 2250/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 281-90

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பிரிவும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு ''நரியன் குண்டு'' நில. பா. 3 (மூன்று) குழி 13, 13/16 (பதின் மூன்றும், பதினாறில் பதின்மூன்றும்) பயிர்களும், குழி 4 கொண்ட கை ஒழுங்கையில் பங்கும் இந்தக் காணியிலிருந்தும் கிழக்காலில் காணிகளிலிருந்தும் வடக்கு ஒழுங்கைக்கு போதற் குரித்தும், வடக்கு கைஒழுங்கையிலும் வடக்கு காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர் பாவும் சொல்லப்பட்ட கையொழுங்கை பக்கத்தால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இக்காணி நில பா. 3, குழி 13. 16 எல்லை கிழக்கு: கணபதி மாணிக்கத்தின் ஆதனம், வடக்கு சொல்லப்பட்ட 4 குழி கையொழுங்கை மேற்கு நாகமணி பெண் தங்கத்தின் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி கந்தையாவின் ஆதனம் இதடங்கலும்.

பதிவு இல: 255/237

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
''வேல் பதி'' 26-1-70
புத்தூர். எம். 409 13-2-70

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

21-2-70 இரதோற்சவம் (ஐந்து இரதங்கள்), 22-2-70 தீர்த்தோற்சவம், 23-2-70 பூங்காவனம், 24-2-70 வைரவர் பூசை, விழாக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் சங்கீத கதாப்பிரசங்கம் தொடர்ந்து நடாத்தப்பெற்று வருகின்றது.

சிவராத்திரி வழிபாடு

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் மகாசிவராத்திரியின்போது வட மாநில பஜனை சம்மேளனத்தின் பஜனைவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

கொம்பனி லிட், (ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டிய பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சமிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, வீதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, க. செ. த செ. செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-67 முதல் 31-3-68 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 18-3-70 புதன்கிழமை முற்பகல 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிற நீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. Ragunathan
வண்ணார்பண்ணை 10-1-70 கொமிஷனர்
எம். 414 13-2-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

லண்டனில்

திருவெம்பாவை திருப்பாவை விழா

லண்டன் மாநகரில் சென்ற மூன்றரை வருட காலமாக தமிழக கலாசாரப்படி சைவசமய வழிபாடு பிரித்தானிய சைவ மன்றத்தினரால் (Hindu Association of Gt Britain) நடத்தப்பட்டு வருகின்றது. சென்ற மார்கழி மாதத்தில் விம்பிள்டன் மண்டபத்தில் திருவெம்பாவை, திருப்பாவை விழா நிகழ்ந்தது. விழாவுக்குத் தலைமை வகித்த சுவாமி பூர்ணனந்தஜி ஆற்றிய விரிவுரையின் சாரம்: ''நீங்கள் வாழும் இவ்விடத்தில் மக்கள் செல்வர்களாக வாழ்ந்த போதிலும் அவர்கள் உள்ளத்தில் மனச் சந்தோஷமில்லை. அவர்கள் அநுட்டிக்கும் சமயம் அவர்களுக்கு உள்ளச் சாந்தியை வழங்கத் தவறிவிட்டது. இந்து சமயக் கொள்கைகள் தங்களுக்கு மனச் சாந்தியை அளிக்குமென உணர்கின்றார்கள். இச் சபையின் அங்கத்தவர்கள் தங்கள் சமயவாழ்க்கைமூலம் வழிகாட்டிகளாகலாம்'' தலைவர் திரு. சபாபதிப்பிள்ளை சுவாமிகளை அறிமுகஞ் செய்தனர்.

சமுகஜோதி மறைந்தது

இராஜவாசல் முதலியார் சி. தியாகராசா அவர்கள் சமுக சேவையின் சோதியாக பல்லாண்டுகள் விளங்கிய பெரியார். பல்வேறு சமுகப் பணிகளை வெற்றிபெற மேற்கொண்டு தொண்டாற்றிய பெருமை 'சமுக ஜோதி'க்குண்டு. இத்தொண்டினைத் தொடர்ந்து அவர்கள் புத்திரரில் ஒருவரான வழக்கறிஞர் சங்கத் தலைவர் தி. சிறி இராமநாதன் ஆற்றிவருகின்றார் என்பது சமுக ஜோதியின் மறைவில் உண்டான துக்கத்திலும் ஓர் ஆறுதல் ஆகும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை கிழக்கு, மாரிமுத்து ஆறுமுகம் நாராயணசுவாமி
M. B. 9647 எதிராக —வழக்காளி
1. அராலிகிழக்கு துரைப்பிள்ளை அல்லது துரைராசா கிருஷ்ணன்
2. ஷெ யூர் பெண் மஞ்சளெச்சுமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9647-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணிகள் என்னால் 1970ம் ஆண்டு பங்குனி ௴ 9-ந்திகதி (9-3-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 9047-00ம், 21-12-68 தொடக்கம் 5-2-69 வரைக்கும் ரூபாய் 7500/-க்கு 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 456-35 சதம் - கோட்டுச்செலவில் ரூபாய் 150/- கொடுபட்டது.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி கிழக்கு இறை ''குண்டுப்பற்றை'' உறுதிப்படி பா. நில. இலா. ஏழு (பா நில. இலா, 7) ஆனால் அளவின்படி பா. நில. இலா ஏழரை (பா. நில இலா. 7½) வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை, வடக்கும் மேற்கும் வல்லிபுரம் தம்புவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், இதடங்கலிற் சொரியலாய் ஈடுவைத்தவர்களில் 2-ம் பெயர்வழிக்குரிய ⅞ பாகமும் அதற்குரியவைகளும்.

2. ஷெ இறை ''புங்கடிவயல்'' பா. நெ. இலா. எட்டரை (பா. நெ. இலா. 8½) எல்லை கிழக்கு பொன்னம்பலம் இராமுவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனம், வடக்கு மாரியம்மன் கோவிலாதனம். மேற்கு சடையன் பெண் சின்னம்மாவிற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனம் தெற்கு முருகர் சின்னப்புவிற்குரிய வாதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

3. அராலி தெற்கிறை ''புதுவயல்'' பா. நெ. இலா. பதினேழரை (பா. நெ இலா. 17½) எல்லை கிழக்கு குமாரசுவாமி தம்பையாவின் உரிமைக்காரர்கட்குரியவாதனம், வடக்கு பொன்னம்பலம் சின்னப்புவிற்குரியவாதனம், மேற்கு பொன்னம்பலம் சின்னப்புவிற்கும் பங்காளர்கட்கும் கந்தன் வேலனுக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், தெற்கு விநாசித்தம்பி கைம்பெண் தங்கத்திற்குரியவாதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

4. ஷெ அராலி கிழக்கிறை ''கட்டாடிசீமா அல்லது நளவ வளவு'' உறுதிப்படி பா. நில இலா. 6 ஆனால் அளவின்படி பா. நில இலா. ஐந்து குழி பத்தரை (பா. நில இலா. 5 குழி 10½) வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு நல்லையாவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், வடக்கு ஈடுவைத்தவர்களில் 2-ம் பெயர்வழிக்குரியவாதனம், தெற்கு கையொழுங்கை இதடங்கலிற் சொரியலாய் ⅞ பாகமும் அதைச்சேர்ந்தவைகளும்.

5. ஷெ இறை ''கம்பன்புலோவும் உடையான் வியப்பும். புளியடிப்புலமும்'' நெ. பா. இருபத்து மூன்று குழி இரண்டு (நெ. பா. 23 குழி 2) எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு உறுதிப்படி வேலுப்பிள்ளை செல்லையாவின் ஆதனம் ஆனால் தற்பொழுது வழிப்பாதை, மேற்கு நாகலிங்கம் பெண் பகவதியம்மாவிற்குரிய வாதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளை வயிரமுத்துவிற்கும் வல்லிபுரம் தம்புவிற்குமுரிய வாதனங்கள். இதில் ஈடுவைத்தவர்களில் 2-ம் பெயர்வழிக்குரிய சொரியலாய் ⅞ பாகமும் அதைச்சேர்ந்தவைகளும்.

காரைநகர், வை. ஏரம்பமூர்த்தி
1970-ஆம் ௵ தை ௴ 20-ம் திகதி. கொம்மிஷனரும்,
எம். 400 13—2—70 விலைமதிப்பாளரும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கொக்குவில் 1. தம்பிப்பிள்ளை செல்வராசாவும்
2 பெண் சரஸ்வதியும் —வழக்காளிகள்
இல: M B 10240 எதிராக
கொழும்புத்துறை 1. நடராசா குமாரசாமி தற்போது கொழும்பு மத்திய வங்கியில் கடமைபுரிகிறார். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M B 10240-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ௵ பங்குனிமாதம் 5-ம் திகதி (5-3-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 7233ம், 26-8-68 தொடக்கம் 14-3-69 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 453-61ம்; இதில் ரூபா 1233/- தவிர்ந்த மிகுதி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கொழும்புத்துறை இறை ''கொம்மர் வழவு அல்லது கொப்பன் வளவு, ஆசைவளவு மண்ணான் வழவும், ஞானி வளவும் மறு பிரிவுகளும்'' 1964ம் ஆண்டு மாசி மாதம் 15-ம் திகதி K. ஐயாது நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 269-ம் இலக்கப் படத்தில் முதலாவது துண்டில் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு 5-ம் இக்காணியில் எல்லைகளாக கிழக்கே ஒழுங்கையும், எல்லை வடக்கு கந்தையா இராமச்சந்திரன் அல்லது சிவநாதனினதும், கந்தையா பாலகிருஷ்ணன் அல்லது சிவஞானத்தினதும் ஆதனம்; எல்லை மேற்கு படத்தில் குறிப்பிட்ட இரண்டாவது துண்டு இது சந்திரசேகரத்தின் மனைவி நல்லம்மாவினுடையது; எல்லை தெற்கு படத்தில் குறிப்பிட்ட 2-வது துண்டு இது நடராசா விசுவரத்தினம் அல்லது ஐயரத்தினத்தினது ஆதனம், இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

''வடிவேல் உதயம்'' சி. ஆ. த. வடிவேலு. J. P.
காங்கேசன்துறை வீதி, கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில். 9-2-70 எம். 411 20—2—70

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 13—2—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்